தொகுதி-௫௮ :: பகுதி-௧௰ — Vol. 58 :: No. 10

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1993
சுபகிருது—தை
JANUARY—1962

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 19—4—63)

உ

உள்ளுறை

பொறியுணர்வும் மனவுணர்வும்,
ந. சுப்புரெட்டியார் 65

இலக்கியத்தில் தேன் நிலவு,
தி. நா. அறிவு ஒளி 72

எழு பிறப்பு,
சாமி பழனியப்பன் 83

''மொழி''
எஸ். கிருஷ்ணஸ்வாமி 89

''செந்தமிழ்'' ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law.)
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை
7. திரு. இ. பழநியப்பன், கழகக் காவலர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.
9. வித்துவான். மு. உலகநாதன் தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை
செந்தமிழ்

தொகுதி. ருஅ Vol. 58	திருவள்ளுவர் ஆண்டு 1993 சுபகிருது — தை 1962—January	பகுதி. கம No. 10

செந்தமிழ் வளர்ச்சி

வித்துவான் சொ. சிங்காரவேலன் எம். ஏ.,
[முதல்வர், ஆதீனப்பல்கலைக் கல்லூரி, தருமபுரம், மாயூரம்.]

'தமிழால் முடியுமா' என்று தயங்குவோர் சிலர்; 'தமிழால் முடியும்' என்று கூறியதோடு தம் அருந்தொண்டால் நிறைவேற்றியோர் பலர். கல்லூரிகளில் பயிற்று மொழியாக இத்தமிழ் நாட்டில் செந்தமிழ் இருப்பதற்கும் ஒரு தடை என்றால் அது வியப்பிற்குரிய வொன்றாகும். செந்தமிழை நன்கு புரிந்துகொள்ளாத சிலரும் இந்நாட்டில் வாழ்கின்றார்கள்; மதிக்கற்பாடு உடையோராய்த் திகழ்கின்றார்கள். அதனால் வருங்கேடே இது. உண்மையை ஊடுருவிப்பார்க்கும் திறம் எல்லோர்க்கும் இல்லை. தம் கொள்கை, கருத்து, எண்ணம் என்பவற்றையே அளவுகோலாகக் கொண்டு பொதுக் கொள்கையை அளவிட நினைவோர் நிலை வருத்தத்திற்குரியது. சிந்தனை மனிதனின் சிறப்புரிமை. எதனையும் எண்ணிப்பார்த்துத் துணிதல் வேண்டும்; பின்னரே அத்துணிவு சொல்லாக, செயலாக விளையவேண்டும்.

செந்தமிழ் எவ்வளவு பேர் எதிர்த்தாலும், சிதைத்தாலும், தன்போக்கில் வளர்ந்து தழைந்துகொண்டுதான் இருக்கிறது. செந்தமிழ் எழுத்துக்களை எழுதிப்பிழைக்கும் சிலர்க்கும் இத் தெய்வ மொழியிடம் மெய்யான பற்றிருப்பதாகத் தோன்றவில்லை. இவர்கள் தமிழ் இலக்கண அடிப்படைகளைக் கூட அறிவதில்லை; அறிய முயலுவதில்லை. ஆனாலும் எழுத நினைக்கிறார்கள்; தம்மை எழுத்தாளர் பட்டியலிற் காணவேண்டுமென்ற ஆர்வம்உடையவர்களாக எழுதுகிறார்கள். அதன் விளைவு வளர்ந்துவரும் இந்நூற்றாண்டின் இலக்கியக் கலை வரலாற்றிலே 'பல குப்பைகளும்' இடம் பெற முந்துகின்றன. வருங்காலத்தில், இத்தகு குப்பை நூல்களும் நூல்கள் என்ற பெயருடன் உலவின; இத்தகு தீயனவும் மக்களால் பாராட்டப்பட்டனவா? ஆயின் அக்கால மக்கள் அறிவில் ஐயம் கொள்ளவேண்டும்' என்று தமிழ்ச் சமுதாயம் எண்ணும் என்றால் அது தவறாகாது. செந்தமிழ் மொழியில் சிந்தனையை வழங்க விழைவோர், மொழியின் அடிப்படை இலக்கண நுண்பொருளைப் புறக்கணித்தல் கூடாது; அவ்வாறு புறக்கணித்து எழுதப்பட்டு, சிலரது கருணையால் அச்சேறியும் விடும் குப்பைகளை மக்களும் புறக்கணிக்கத் தவறக் கூடாது. இத்தகு மனம் எங்கும் உறுதிப்பட்டால் இந்த நூற்றாண்டில் நம்மொழி வளர்ந்தது என்று நாம் பெருமைப்படலாம்.

தமிழ்நடையில் எழுத எண்ணுவோர் மக்கள் மன்றம் கருதியும், செல்வாக்குள்ள பத்திரிகைகளில் வெளியிட வேண்டுமே என்று எண்ணியும், அப்பத்திரிகைகளில் தம் எழுத்துக்கள் வந்தால் தமக்குத் தக்க விளம்பரம் கிடைக்குமே என்று சிந்தித்து, தம்முடைய நடையை அவற்றுக்குத் தக மாற்றிக் கொண்டு எண்ணிக்கையற்ற வட சொல், ஆங்கிலச் சொல், கொச்சைச் சொற்களைக்

கோத்து எழுதும் இழிந்த சூழ்நிலையும் ஒரு பக்கம் காண்கிறோம். இஃது ஓர் அவலநிலையே. தனக்கென ஒருநடை உடையவனே அறிஞன். தூய அறிவு உடையவனே தெளிவுடையவனாக இருப்பான். அத்தெளிவே அவனுக்குப்பல புதிய எண்ணங்களை விளக்கும்; சமுதாய வளர்ச்சிக்கான, மொழிவளர்ச்சிக்கான கருத்துக்கள் மலரும். அங்ஙனமில்லாது, தன்னலம் கருதித் தன் நடையிலே குழப்பங்கொள்வோமானால் நாடோ, மொழியோ, இனமோ ஒரு பயனும் எய்த முடியாது. தனக்கென ஒரு நெறி தேடிக்கொள்ள இயலாத அவனால் எப்படிப் பிறர்க்கு நெறிகாட்ட இயலும்? எனவே, இத்தகு 'கொள்கைமாறும் கோல'முடையோரால் இந்நூற்றாண்டில் நம் செந்தமிழ் அடையும் இடர்களும் பலவாக உள்ளன.

அழகாகப் பேச வேண்டும்; அழகாக எழுத வேண்டும் என்று சிலர் எண்ணுவதில் தவறில்லை; அந்த அழகு எங்கிருக்கிறது என்று அறியாமையே தவறு. பல வட சொற்களைக் கலந்து எழுதுகின்றார்கள்; வட சொற்கள் இவை தமிழ்ச் சொற்கள் இவை என்று பகுத்துணரும் திறமே அப்பலரிடம் இல்லை. பயிற்சியாலும், மொழியைப்புரிந்து கொள்ளும் முயற்சியாலுமே இத்திறம் வரும். இத்தகைய மக்களிடம் செந்தமிழ்ச் சொற்கள் அகப்பட்டுக்கொண்டு படாத பாடுபடுதல் அறிந்தவர் அவலத்திற்குரியவொன்றாகும்.

செந்தமிழ் தித்திக்கும் மொழி; உணர்வுக்கு உரமூட்டும் உயிர்மொழி. உயர்தனிச் செம்மொழி, மனவியலுக்குத் தக்கபடி வழிகாட்டும் மாண்புமொழி. இதனைத் திருத்தமுறக் கற்று உயர்வதும், அக்கல்வியைப் பெறாருக்கு அறிவுறுத்துவதும் பேரின்பம் தரும் பெருஞ்செயல்கள்.

செந்தமிழ் என்ற பெயர்க் குறியீடே இச்சீரிய மொழியின் செப்பத்தையும் சீர்மையும் குறிக்கும். செம்மையான தமிழ் என்ற சொற்பொருளை உடைய இச்சொல்லாட்சியை, நம்முடைய பழந்தமிழ் முதல் இலக்கணப் பெரும்பனுவலாகிய தொல்காப்பியத்துள்ளும், அதன் பாயிரத்துள்ளும் காண்கிறோம்.

'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தோடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி'

என்பது பனம்பாரனார் வாக்கு: இவ்விடத்துச் செந்தமிழ் என்பதைச் செவ்விய தமிழ் என்று விரித்துரைப்பர் நச்சினார்க்கினியர்.

'அவற்றுள்
இயற்சொற்றாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வாழாமை இசைக்கும் சொல்லே'
'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப்பினவே திசைச் சொற் கிளவி'

என்பர் தொல்காப்பியனார். இச் செந்தமிழ்நாடு சோணாடே என்றும், பாண்டிநாடே யென்றும் கொள்ளும் இருவேறு கொள்கைகளை நம் உரையாசிரியர்களிடம் காணலாம். வட வேங்கடம் தென் குமரியிடைப்பட்ட பகுதியே அக்காலத்துச் செந்தமிழ் நாடு என்று குறிக்கப்பட்டதென்பர்: கி. மு. 5ம் நூற்றாண்டில் தொல்காப்பியர் வாழ்ந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. அதற்கு முன் பல்லாயிரக் கணக்கான இலக்கியங்கள் தோன்றிப் பண்பட்டிருக்க வேண்டுமென்பர். ஆயின் செந்தமிழ் வளர்ச்சியின் பழமையை இன்னதுதான் என்று தெளிவுற அறிவதற்குச்

சான்றில்லை. இத்தகு பழமையும் பண்பாடும் உடைய உலக மொழிகள் மிகச் சிலவே. அவற்றுள்ளும் நம் செந்தமிழ் சீரிய இடம் பெற்றுச் சிறந்துள்ளது. சங்கப் புலவர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், காப்பிய ஆசிரியர்களும், சமணச் சான்றோர்களும், தனிப் பாடலாசிரியர்களும், பாடிப் பரவி வளர்த்த செந்தமிழ் இந்த நூற்றாண்டில் வளர்ந்துவரும் நிலை ஒருபுறம் மகிழ்வும் மறுபுறம் வருத்தமும் தருவதாகவே உள்ளது.

தமிழறிந்தவர்கள் செல்வாக்குடன் உயர்பதவிகளில் இருந்தால் தமிழின் வளர்ச்சி சிறந்தோங்கும் என்பதற்கு ஐயமில்லை. மனம் போனபடியெல்லாம் எழுதுதலும், அவ்வெழுத்தைச் சிலரும் பலரும் கூடிப் போற்றத் தொடங்கவே அனைவரும் கண்மூடிக்கொண்டு பின்பற்றுதலும் நாட்டில் நிகழத்தகாதவை. சிந்தனைத் திறனும், செழுமையான புலமையும் உடைய அறிவுடைப் பெருமக்கள் நிறைந்துள்ள இத்திருநாட்டில் இவ்வாறு நிகழ்தல் பெரிதும் பொருத்தமில்லாததேயாகும்.

மக்கள் விருப்பத்திற் கேற்றபடி எழுதுவது என்ற நிலையை மாற்றி, மக்கள் வாழவேண்டிய நெறிக்கேற்றபடி எழுதுவது என்ற குறிக்கோளை எழுத்துலகில் உள்ளவர் என்றும் மறத்தலாகாது. சங்ககாலத்தே வாழ்ந்த சான்றோர்கள் மன்னர்கள் மனங்களிக்கப்பாடி மகிழ்வித்ததுடன் அவர்களை அறநெறிப்படுத்தும் ஆற்றலும் உடையோராய்த் திகழ்ந்தார்கள். அதனாலேயே அப்பாடல்கள் காலத்தை வென்று நின்று இன்றும் இன்சுவையூட்டி இன்னெறி காட்டுகின்றன. இக்காலத்து மன்னர்கள் என்றொரு தனி மரபு இல்லை. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கருத்து மலர்ந்திருக்கும் குடியாட்சிக் காலம் இது. இக்

காலத்துச் சான்றோரும் மக்களை மகிழ்விப்பதுடன், மாண் பொருள் காட்டி வாழ்வித்தலும் வேண்டும். கீழ்த்தரமான உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு, மனிதர்களை மிருகங்களிலும் கீழ்நிலைக்கு ஈர்த்துச் செல்லுகின்ற குப்பைகளை உற்பத்தி செய்தவண்ணமிருக்கும் உத்தமர்கள் அந்த அருஞ்செயலை நிறுத்துதல் வேண்டும். தந்நலம் ஒன்றே பொருளாகக் கொண்ட தறுகணாளர்களால் ஒரு நாட்டிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் விளையும் தீங்குகள் மிகப்பல.

செந்தமிழ் வளர்ச்சியின் சீர்மைக்கான செயல்முறைகளை ஒவ்வொருவரும் மேற்கொள்ளுதல் வேண்டும். கல்வி கற்கும் மாணவர் முதல் கற்றுவல்ல பெரும்புலவர் வரை, நாட்டின் கடைநிலை ஊழியர் முதல் முடிநிலை அமைச்சர்கள் வரை அனைவர்பங்கும் இதில் இருக்கின்றது. 'உள்ளத்தால் ஒருவரே; உடலினால் பலராய்க் காண்பார்' என்ற நிலைக்கு வந்து அனைவரும் ஆற்றும் நற்செயல்களாலேயே வருங் காலத்தில் செந்தமிழ் மெய்யான வளர்ச்சி பெறமுடியும்.

மானத்தின் சிறப்பு

அன்பு-கருணையானந்தா
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

மானமே மாந்தர் மனதிற் கினிமைதரும்
மானமே வாழ்வின் மறுமலர்ச்சி-மானமே
வீரன் கணைக்காலன் வெற்றிவிளக் காகுமிந்தத்
தீரனையே போற்றும் செகம்

தமிழ்ப் பண்பாடு

புலவர், தி. நா. அறிவுஒளி

ஒரு நாட்டின் பண்பாடு என்று கூறப்படுவது யாது? ஒரு நாட்டு மக்களின் மனவளத்தின் மாண்பினுல் விளையும் விளைவே அந்நாட்டுப் பண்பாடு எனப்படும் என ஓராற்ருன் சுருங்க உரைக்கலாம்.

மக்களின் 'உள்ளத் தனையது உயர்வு' என வள்ளுவர் கூறிய நுண்ணிய நலமார் உண்மை கருதுதற்குரிய தாம். தமிழ் மக்களின் உள்ளம் வளமார் நாகரிக ஞாலமாகும். கடந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே இடையருது தடைப்படாது வளர்ந்து வரும் மிகப்பழம் பண்பாடு தமிழ்ப் பண்பாடே என்பதை உணர வேண்டும்.

உலகில் தோன்றிய பழைய பண்பாடுகளில் அன்று போல் இன்றும் நிலவும் ஒரு பெரும் தனித்தன்மை வாய்ந்த சீரிய பண்பாடு தமிழ்ப் பண்பாடு ஒன்றே.

மரபு மரபாகப் போற்றிக் காப்பாற்றி வளர்க்கப்பட்டு வரும் தமிழ்ப் பண்பாட்டின் வளத்தைத் தமிழரே இன்னும் தெளிவாக உணராதிருக்கும் இரங்கத் தக்க நிலை வருந்து தற்குரியதேயாம்.

அறிவியல் வாய்ப்புக்களும், வாழ்க்கையின் நலன்களும் நாடோறும் மிகுதியான அளவில் வளர்ந்து கொண்டே செல்கின்றன. ஆயினும் மக்களுக்கு அக அமைதியும், தூய நல்லின்பமும் ஆழ்ந்த ஆறுதலும், உயரிய நம்பிக்கை யும், பரிவார்ந்த பற்றும், அன்பார்ந்த அருள் வாழ்வும், இனிமையடைவும் அமையக் காணவில்லை. செல்வம், செல் வாக்கு, தகுதி, அதிகாரம், ஆற்றல், பட்டம், ஆணவச் செம்

மாப்பு, போலிப் புகழ் ஆகியவற்றைத் தேடி அலைகின்ற போட்டிக் களமாக வாழ்க்கை ஆக்கப்பட்டுள்ளது. இதனால் தான் பலர் பற்பல வாய்ப்புக்களைப் பெற்றிருப்பினும் அமைதி சூலைந்து அல்லலிலழுந்தி ஆற்றொணு இடரில் துடிக்கின்றனர். அகப்பண்பாடும், விழுமிய உணர்வும், மேதைமை யியல்பும், அறிவுச் செப்பமும், ஒழுக்கக் கற்பும், போற்றியுணர்ந்து ஒழுகினல் தவிர மக்களுக்கு இன்பம் கிட்டாது. தமிழ் ஒழுகலாற்றைத் தவிர உலகினர்க்கு வேறு புகலில்லை. பழமையான நல்லன வெல்லாவற்றையும் உலகம் புதுமை யெனக் கருதி ஏற்று, நம்பிக் கடைப்பிடித் தொழுக வேண்டும். தமிழறத்தைத் துறந்தால் உலகு பாழாய் விளியும்.

அகப்பண்பாடு பெற்றுவிரிந்த நோக்கால் உலகினரை அருளோடு நோக்கி நலமுறும் மாபேரறிவுடைமை எளிய வகையில் அமைந்துவிடாது. இவ்வுண்மையைக் கற்ருேர் பலரிடம் அகப்பண்பாடில்லாமையைக் காண்பதால் நன்கறிகிருேமன்ருே? தன்னிறைவு, தன்னமைதி, தன்ஞறுதல் தன்னடக்கம் ஆகிய பண்பொழுகலாறுகள் கல்வியினுல் மட்டும் உண்டாகிவிடுவதில்லை என்பதையே இதனுல் உணர முடிகிறது. துறவும், தன்னல மறுப்பியல்பும், இன்ஞ செய்யாமையும், இரக்கமும், சால்பும் எவ்வாறு உள்ளப் பயிற்சியால், உள்ளப் பண்பாட்டால் படிப்படியே உருவாகி அமைகிறதோ அப்படியே மேற்குறித்தனவும் உள்ளப் பயிற்சியாலும் உணர்வுத் தெளிவு பெறுகையினுலும் அமைவதாம்.

இவ்வுண்மை தெளிந்தவர்கள் பண்டைத்தண்டமிழ்ச் சான்ருேர்கள். அதனுல் 'இயற்கை வழிப் பண்பாட்டை'த் தம் வாழ்வொழுக்க மரபாக்கிக் கொண்டனர். 'உலகம் துன்பமானது' என்பது தமிழர் கோட்பாடன்று. உலகில்

துன்பம் உண்டு என்பதை உடன்பட்டவர், ஆயின் அதுவும் இயற்கையறத்தின் அமைப்பே என்ற நுண்ணுண்மை தெளிந்தவர்கள் தமிழ்ச்சான்றோர். அதனால்தான் 'இன்னாது அம்ம உலகம்: இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே' எனப் பண்டைச் சால்புச்செல்வர் பாடியருளினர். ''தீதும் நன்றும் பிறர்தரவாரா; நோதலும் தணிதலும் பிறர்தர வாரா'' என்ற தமிழ் ஒழுக்க மாண்பும் இவ்வியற்கை வழிப் பட்ட பண்பாட்டுக் கொள்கைகளே.

இந்தத் தனித்தமிழ்ப் பண்பாட்டுக் கொள்கையின் நுட்பமும், அமைதியும் உலகின்வேறு எச்சமயத்தாரிடமும் இல்லாதது. எந்தச் சமயக்கொள்கையும் கூறாதது; ஏன்? காணாதது என்றே கூறலாம்.

பிற்காலத் தமிழகச்சமயங்களான சைவநெறிகளும்கூட சங்ககால இம்மெய் யுணர்வுப் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவில்லை என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

'இன்பமும் இடும்பையும் நண்பகல் அமையும் இரவும் போல' அமைவது எனச் சங்கப்புலவர் கூற்று தவிர்க்கமுடி யாத இருவேறியற்கை ஒழுக்கத்தைத் தெள்ளத்தெளிய உணர்த்துகிறது. துன்பத்தைக் கடக்க-அஞ்சிவிலகத் தமிழர் முயன்றனரில்லை. துன்பத்தோடு போரிட்டு அதை வெல்லவே முயன்றனர். தமிழ்ப்பண்பின் தலையாய இயல்பு இந் நுண்ணிய ஒழுக்கமே.

இயற்கையோடி யைந்த எண்ணம் - சொல் - செயல் களையே அவர்கள் போற்றியமையால்தான் ஐந்திணை ஒழுக லாற்றை முறைப்பட அமைத்து வாழமுடிந்தது. நாட்டு இயற்கையின் பண்பு அங்கு வாழும் மக்கட் பண்பாகவும். அன்னார் வாழ்க்கைப் பண்பாகவும் அமைவதே யாகும்,

இந் நுட்பத்தைத்தான் சங்க இலக்கியங்கள் பல கோணங்களில் சொல்லித் தருகிறது.

அன்பை அணைந்து வாழவேண்டும் என்பதே தமிழ்ப் பண்பு. அன்புக்குக் கட்டுப்படாமல் எக்காரணத்துக்காகவும் விலகி ஓடவிரும்பவில்லை தமிழகத்தினர்.

"தம் நயந்து உறைவோர்த் தாங்கி, தாம் நயந்து
இன்னமர் கேளிரொடு ஏமுறத்த கெழீ இ
நகுதல் ஆற்றூர் நல்கூர்ந்தோர்"—(அகம்)

என்பதல்லாவா அருந்தமிழர் தம் கொள்கைப்பண்பாடு.

மக்களுக்கு இயற்கையாக இருக்கும் தன்னலத்தைச் செயற்கையாகச் சிதைக்க முடியாது. ஆனால், அத்தன்னலத்தை வழிமாற்றி அன்புள்ள பொதுநலமாக மாற்றிவிடலாம். அந்த அருங்கலையைத் தெரிந்து ஒழுகியமன்பதை 'தமிழ்மன்பதை' யேயாம்.

தமிழ்ப் பண்பாடு 'துன்பத்திலே இன்பம்' காண முனைந்த 'ஆர்வஒழுக்கம்'

..." நும்மொடு
துன்பந்துணையாக நாடின் அதுவல்லது

இன்பமும் உண்டோ எமக்கு?" (கலித்தொகை)
எனக் காதல் 'வாழ்வில் துன்பத்தின் துணையோடுவாழ்வது இன்பமாகும்ஆயின் காதலன் துணை உடனிருக்கவேண்டும். என்ற இல்வாழ்வுக் கொள்கை தமிழ்ப்பண்பின் வேர்முதல் நாகரிகத்தை நன்கு காட்டும்.

ஒருவரோடு அன்பு பொதிந்து வாழ்வதை வற்புறுத்தும்போது முரண்பாட்டால் விளையும் பகையையும் இயற்கையென்றே தமிழகம் ஏற்றது. அப்பகையோடு மாறுடிப்

போராடுவதும் ஒருகலையாகப்—புறத்திணை ஒழுக்கமாக—அமைத்த பண்பாடு தனி இயல்புவாய்ந்ததுதானே!

"அறத்திற்கே அன்பு சார்ப என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்ற குறள் மொழியால் வள்ளுவமேதை தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையைச் சுட்டிக்காட்டினர்.

ஆயின் பகைவன்பாலும் அருளுடைமை பாராட்டுவது தமிழ்ப் பண்பு "பழகிய பகையும் பிரிவின்னாது!" எனப் பாடியபுலவர் கருத்து எத்துணை உணர்வொழுக்க நுட்பம் வாய்ந்தது காண்மின்!

"பேராண்மை என்ப தறுகண்மைஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

என்ற கருத்துரையில் பகைவன்பால் அருள் கொண்டு உதவுவதைப் பேராண்மையினும் சிரியதாகப் பாராட்டிய நுட்பத்தைத் தெளியலாம்.

'இன்பம் ஒன்றே வாழ்வு நோக்கம்' என்பது தமிழர் முற்றும் ஏற்ற கருத்தன்று. ஏன்?

'கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்" (அகம்)

பழியற்ற இன்பமே பெறுதற்குரியது என்ற முறையான தமிழ்ப் பண்பாடு எத்துணை சிரியது!

'நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்!'

என்பதே தமிழர் செயல்துறை இலக்கணம் 'நல்லதுசெய்ய முடியாவிடினும் தீமைசெய்யாதே அதுவே ஒருஅறம்தான்' என்ற நல்லபண்பாடு எவ்வளவுகடுமையானது என்பதைக் கடைப்பிடித் தொழுகமுயல்வோர் நன்கறிவர்.

இத்தகு தனித்தன்மைப் பண்பு நலன்கள் பலதமிழ் நாட்டுக்கே கூறிய தமிழ்ப் பண்புகளாகும். அவற்றை ஓதி யுணர்ந்தொழுகுதல் இளந்தமிழ்க் குடியினரின் தலையாய கடமையாகும்.

—*—

பணத்தின் சிறப்பு

பணமே அறிவாம் பணமே மனிதன்
பணமே உயர்வுதரும் பண்பு — பணமே
இகபர வாழ்வின் இணையற்ற பேறு
தகையீர்! பணமே சதம். அன்பு கருணையானந்தம்

முத்தமிழ்க் கோயில்

பண்டித நடேசனர்.
''முத்தமிழ்'' ஆசிரியர்.

''ஓங்கவிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருள் கடியும்—ஆங்கு அவற்றுள்
மின்னேர் தனியாழி வெங் கதிர் ஒன்று: ஏனையது
தன் நேர் இலாத தமிழ்''

தெய்வத் தமிழ்:—

சிவனது தமருகத்திலிருந்தே நாதமாகிப் பரவிய மொழியே தமிழ் மொழிஎன்ப. தழற் பொலி விழிக் கடவுள் தந்த தமிழ் என்றும் ஆதியில் தமிழ் நூல் அகத்தியற்கு உணர்த்தினர் மாதொரு பாகன் என்றும் ஆதாரங்காட்டுப. பழைய தமிழ் நூல்களிலும் ஓலைச்சுவடிகளிலும்பிள்ளையார் துதிக்கையைக் காட்டும் ஒரு சுழியும் பஞ்சாட்சரமும் அரிந மோத்து சிந்தம் எனும் தொடரும் பொறித்துள்ளதைக் காணலாம்: இஃது இம்மொழிக்குச் சிவனே முதலாசிரியன் என வலியுறுத்துகிறது. மக்களே மொழிகளைக் கண்டனர் என்பர் பட்டத்தாலுயர்ந்தோர். முற்காலத்தில் உலகில் அருட்செல்வமும் பொருட் செல்வமும் நிறைந்தது தென் னிந்தியா. அதைத் 'திருவிடம்' எனத் தமிழர் கொண்டனர், அன்று அங்கு உலாவியது ஒரு தனி மொழி தமிழே. சேர சோழ பாண்டியர்களின் அரசியல் மொழியும் தமிழே. எனவே. திராவிட மொழி திராவிட மொழியாகச் சிதைந் தது எனலாம். பழங் கன்னடத்தையும் அச்சுத் தெலுங்கி னையும் மலையாளத்தையும் துளுவத்தையும் அறியுங்கால் கன்னித் தமிழே திருவிட மொழிகளுக்கெல்லாம் தாய் என்பது விளங்கும், தெய்வ சம்பந்தமுடைய சைவத்தையும் வைணவத்தையும் மருவிய மக்கள் பேசும் மொழி தெய்வ

மொழியே, கணிகண்ணன் பின் கச்சிவண்ணன் சென்ற கதையும் இடைக்காடன் பின் சச்சிதாநந்தன் சென்ற காதையும் கடவுட் சம்பந்தமுடையதே தமிழ்மொழி என விளக்குகின்றன. நவில்தொறும் நூல் நய முடையன புராணங்கள்: எண்ணவும் எழுதவும் சொல்லவும் இனிப்பது ஊறுமின்றமிழ் என்பது உண்மை: வெறும் புகழ்ச்சி இல்லை,

முத்தமிழ்:—

உலகில் எம்மொழியிலும் இல்லாத ஒரு சிறந்த சொல் இதுவே, இயல் இசை நாடகம் குறிக்கும் ஒரு சொல் தமிழின்றி ஏனைய மொழிகளில் இல்லை. தெய்வத் தமிழை முக்கூறுகளாக்கினர் முந்தையோர். இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பன குறிக்கும் ஒரு சொல்லே 'முத்தமிழ்' எனுந்தீஞ்சொல். முத்துக்குமாரசாமியை அகத்திய முனிவர்க்கு முத்தமிழ் கற்பித்த கடவுள் என்றும் முருகன் அகத்தியர்க்குத் தமிழ் கற்பித்த இடம் தணிகைமலை என்றும் அம்மலை "குருமலை" எனப் பெயர் பெற்றதென்றும் அகத்தியர் தம் தமிழாசிரியரைப் பூசித்த ஆலயமே நந்தியாற்றங் கரையில் இன்றுமுள்ள ஆறுமுக சுவாமிக் கோயில்என்றும் முருகனே தமிழறியும் பெருமான் என்றும் பெரியோர் கூறினர். இம்மும்மைத் தமிழிற்குத் தனித்தனி இலக்கியங்களும் இலக்கணங்களும் இருந்தன. இத்தகைய ஆதிநூல்களுக்கு ஆசிரியர் அகத்தியரே. மூவேந்தரும் முத்தமிழைப் போற்றினர். முத்தமிழை ஆலயங்களில் வளர்த்தனர் தமிழகம் முத்தமிழோடு மருவிய மங்கள வாழ்வினைக் கொண்டனர், மாணவர்களும் குருகுலவாசிகளும் முத்தமிழிலும் பயிற்சி பெற்றூர்கள். முத்தமிழ்ப் புலமையே மூதறிவாகும். அகத்தியர்க்கு முன்னரே அருந்தமிழ் உச்சநிலை பெற்றுத் தமிழர்க்குக் கண் போலவும் உயிர்போலவும் உலாவியது. அகத்தியர் தமிழ் நூல் பல படித்தே அகத்தியங்கள் எழுதியிருப்

பார். எழுதாக் கிளவியாய்த் தமிழ் இருந்திராது. வட முனி வன் வட மொழியை நன்கு உற்றவனுகையால் தமிழில் இல்லாத இலக்கணங்களைச் சமஸ்கிருதம் தழுவி இயற்றி யிருக்கலாம். மொழி வளர்ச்சிபுலவரிடமில்லை. மொழியிலும் குடியாட்சி உண்டு. எழுத்தறியா மாக்களிடமே மொழி வளர்கிறது. அத்தகையை நெறி இழி நிலையை மொழிக்குக் கொணராவண்ணம் காப்பதற்கே புலவர் பாடுபடுவர். இலக்கியம் கண்டதற்கே இலக்கணஞ் செய்வர்: இலட்சி யத்தின் அமைதியே இலட்சணமாகும். மிகுந்துள்ள சிலப் பதிகாரமே முத்தமிழ்க் காவியம் எனலாம். ''குடக்கோ முனிசேரன் தண்டாவுரை முத்தமிழ்'' எனும் சிலப்பதி காரச் சிறப்புப் பாயிரம் காண்க! அரசியலுக்காக அமைந்த சங்கங்கள் முத்தமிழையும் சமாதான காலத்தில் வளர்த் தன. முத்தமிழ்க்கவி; முத்தமிழ்க் கவிஞர்; முத்தமிழ் வித்த கர்; முத்தமிழ் வீரகர் எனப்பெரும் புலவர்களுக்குத் தகுதிக் கேற்பப் பட்டம் வழங்கப்பட்டன. எனவே பண்டையில் பதினெட்டு மொழிகளைக் கற்றவரே பண்டிதர் என்றும் முத்தமிழ் முழுதும் கற்றவரே புலவர் என்றும் அழைக்கப் பட்டார்கள்.

சங்கத் தமிழ்: —

செந்தமிழ் கொடுந்தமிழ் எனல்போல் உலக வழக் கோடு ஒவ்வா மொழிக்கே சங்கத் தமிழ் எனலாம். பாகத மொழிகளில் தமிழும் ஒன்றே, வட நாட்டில் ஒரு பிராக்ரத மொழியைச் செப்பஞ்செய்து தன் மொழியாக்கியதே வட மொழியெனும் சம்ஸ்கிருத மொழியாகும். தென்னுட்டில் கொடுந் தமிழைச் சீர்திருத்தியதே செந்தமிழெனும் சங்கத் தமிழாகும்; மொழி வளர்ச்சிக்கு ஆராய்ச்சி மிக முக்கிய மானது. ஆயும் மொழி நூல் புலவர் கூடும் கூடம் வேண் டும். இவ்வுண்மையை நம்முன்னேர் அறிந்தார்கள் அத்

தொண்டிற்காகவே பட்டிமண்டபங் கண்டார்கள் 'பன்னருங்கலை தெரிபட்டிமண்டபம்' என்றும் கந்தனை அனையவர் கலைதெரிகழகம் (கற்றோரே சேருமிடம்) என்றும் கூறினார் கம்பர் இலக்கண வரம்பிலா மொழிகள் போன்றது தமிழன்று "கூடலின் ஆய்ந்த ஒண் தீம் தமிழ்" எனும் திருக்கோவையாரை உன்னுக; வேதவியாசருக்கு முன்னரே தொல்காப்பியம் இருந்தது. அவ்வரிய இலக்கண நூலில் 'சகரக்கிளவி' இல்லை என்பதைக்கொண்டு முத்தமிழ்ச் சங்கங்கள் இல்லை என வாதிடுவோம் உண்டு, இன்றுள்ள வடிவமே அன்றிருந்த தொல்காப்பியம் என எவரும் துணிந்து கூறமுடியாது. எனவே, சில பல சூத்திரங்கள் மறைத்தும் செறித்துமிருக்கலாம். ஆதலால் சங்கமிருந்ததில்லை எனல் மிகையாம். இன்று ஆறுதல் கூறுமிடங்களையும் 'சங்கம்' என்றும் 'கூடம்' என்றும் கூறுதலைக் கேட்கவில்லையா? இன்றும் "நதி சங்கமம் ஆகிறது" என்று மக்கள் கூறுகிறார்கள். இது புதிய வழக்குச்சொல் எனக் கூற முடியாது; மிகத்தொன்மையானதே. மதுரையில் இன்றும் சங்கத்தார் கோயில் உண்டு. அதனில் 49 புலவர்களின் சிலைகளும் சகலகலா வல்லியுருவமும் இருக்கின்றன. 'ஈங்கோய் மலையில் நக்கீரர் வடிவம் உண்டு. 'சங்கமலி செந்தமிழ்' எனத் தேவாரத்திலும் 'சங்கத்தமிழ்' என்று திருப்பாவையிலும் தொடர்களுண்டு, பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் விநாயகர்க்குப் படைத்து, சங்கத் தமிழ் மூன்றையும் வரமாகக் கேட்டார் ஔவையார். சங்கத் தமிழ் நூல்களே அன்றையத் தமிழகம் காட்டும் எழுத்தோவியங்களாகும்; புராணங்கள் வரலாற்றுச் சொல்லோவியங்களாகும்.

இயற்றமிழ்:—

இஃது இருவகைப்படும். பேசுந்தமிழ். எழுதுந்தமிழ் என்பன சொல்லிலும் பொருளிலும் ஓசையிலும் உச்சரிப்

பிலும் இலாபங்காண மக்கள் சொற்களைச் சிதைத்தும் உருமாற்றியும் ஒலித்துப் பேசுவார்கள். இத்தகைய சோம்பேறிப் பழக்கம் எந்நாட்டிலும் எப்பாஷையிலும் உண்டு. எழுதும் மொழிக்கும் பேசும் மொழிக்கும் வித்தியாசம் உண்டு. இம்மாற்றம் இருத்தலே அபிவிருத்திக்கு அடையாளமாகும். மாற்றம் மறுமலர்ச்சிக்கு வித்து ஆகும். இயற்றமிழ் இலக்கணத்தமிழாகும்; நல்ல நடையிலும் நன்முறையிலும் பேசும் எழுதும் மொழியாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியிலக்கணங்கள் விரவியதே இயற்றமிழ் எனப்படும். மேற் கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் இயற்றமிழினதாகும். சங்கவிலக்கியங்கள் யாவும் இயற்றமிழால் இயற்றப்பட்டவை. இவ்வியற்றமிழையே சங்கீத வித்வான்களும் நடிகர்களும் படித்துப் படித்துப் பழகி, வாழ்வில் வளம்பெறப் பாடியும் ஆடியும் வாழவேண்டும். தற்கால நூலாசிரியர்கள் மாணவர்க்கும் பிறர்க்கும் இயற்றமிழிலேயே எழுதவேண்டும்; பேச்சாளர்களும் நற்றமிழில் பேசவேண்டும். நற்றமிழே உலகம் உள்ளளவும் நிற்கும். இலக்கணம் நன்மொழி அழியாமற் காக்கும் படையாகும்.

இசைத் தமிழ்:—

பாம்பும் பண்ணில் அடங்கும்; மறவரும் இசையால் மருளுவர்; யானையும் மகண்மாவும் இசையால் அடங்கும்; அசுணப் பறவையும் இசையால் ஆனந்தம்பெறும். சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் அவைகளின் உரைகளிலும் இசைத்தமிழின் பாகுபாடுகளை அறியலாம். இசையின் நுணுக்கங்களை ஆய்ந்ததே இசை நுணுக்கம் எனும் பழைய தமிழ்நூல். சிகண்டி, பெருநாரை, குருகு, பதினறு படலம், செய்யுள் துறைக்கோவை என்பன பழங்குடி மக்களின் இசைத் தமிழ்க்கருவிகள். வடமொழி ஸ்வரங்களின் பெயர் போன்ற தமிழ் மொழியில் குரல், துத்தம், கைக்கிளை, உழை,

கிளி, விளரி, தாரம் (''சரிகமபதநி'') உண்டு. பண்களுக்கும் திறங்களுக்கும், ஏனைய விரிவுக்கும் விருந்துக்கும் தாயகம் இவ்வேழே ''நிறை நரம்பிற்றே பண்ணெனலாகும்; குறை நரம்பிற்கே திறமெனப்படுமே' என்பது திவாகர நிகண்டு. பகலில் பாடும் பாட்டுகளும் இரவில் பாடும் பண்களும் உண்டு.

எதற்கும் இலக்கணம் உண்டு; எவ்விலக்கணத்துக்கும் இலக்கியம் உண்டு. இசைக்கு இலக்கணம் கூறமுடியாது. இசை உலகமொழி, அஃது ஒரு தனி மொழி, உலகெங்கும் உலாவும் ஒருமொழி இசையே, இது செல்லாத இடமில்லை, ஒப்பற்ற மொழி இசையே. குருக்களையும் ஞானிகளையும் இயக்கியது இசையே; வால்மீகி ராமாயணம் கம்பராமாயணம் இசையோடு இயற்றியன. உலகின் உயிர், இசையே, ஆன்மாவை வெளிப்படுத்தி ஆனந்தம் பெற வைப்பதும் இசையே. அழகெனும் பண்பு செய்ய முடியாத ஒன்றைச் செய்யவல்லது இசைத்தமிழே. உடலை உடலோடு சேர்ப்பது அழகு; ஆனால் உள்ளத்தை உள்ளத்தோடும் உயிரை உயிரோடும் சேர்ப்பது இசையே. உள்ளங்களை ஒன்றாக்கி உருக்கி வடிப்பது இசை எனும் அரிய கருவியே.

கண்ணபிரானும் ஆனாய நாயனாரும் தம் இசையால் எவ்வுயிரையும் செயலற இயக்கினார்கள். இசையே சக்தி; ஒரு பெருஞ்சக்தி; பராசக்தி; திருக்கூத்தின் ரசமே அச்சக்தி.

பக்தன் இசையாகிய கருவிகொண்டு இறைவனிடம் பேச முடியும். இதய குகையிலுள்ளவன் இறைவன். இதய கீதம் இசையாலாகியது. இசையின் சாயலே பாவமாகும், எடுத்துச் சொல்ல முடியாத ஒன்றுக்கு வேர் இசையே;

சொல் சொல்லாதவைகளையும் விளக்குமாற்றல் அற்றவைகளையும் உணரவைக்கும் ஆற்றல் இசைத் தமிழுக்கே உண்டு. சொல்புகா இடத்தில் இசைத்தமிழ் புகும்.

உலகத்தார்க்கு ஆணியாம் உழவனும் நீரிறைப்பவனும் சுமையாளியும் வண்டிக்காரனும் பாடிக்கொண்டே தங்கள் வேலையைச் செய்கிறார்கள். இவர்கள் இசைக்கும் பாக்களைப் பள்ளர்பாட்டு, உழவர்பாட்டு, மழவர்பாட்டு, ஏற்றப்பாட்டு என்ப. இசையால் இயக்கப்படாததும் ஊக்கப்படாததும் உலகில் இல்லை. மனத்திலெழும் உணர்ச்சி தமிழறிவின் மேல் எழுப்பப்பட்டுள்ளதே இசைத்தமிழ் ஆகும்; உலகிற்குத் தமிழகம் தரும் தானம் அரிய இசையே. மெல்லிசையும் வல்லிசையும் ஒத்திசைத்தல் ஓர் அரசாங்கம் நடைபெறுதல் போன்றதாகும்.

தனி மனிதனையும், பல்லோரையும் ஆன்ம தத்துவத்துக்கு இழுத்துச் செல்வது இசையே. பல்லாயிரவுணர்ச்சிகளும் சேர்ந்து உருக்கொண்டதே மனித மனம். உணர்ச்சிகளின் திரட்சியே மனிதன். அவனுள் ஆண்மையும் பெண்மையும் இயங்குகின்றன. அவை இசைவடிவன. இராகு. இராகினி வடிவங்களே. ஆண் பெண் என்பன. ஆளும் தன்மையது ஆண்; பேணும் தன்மையது பெண், இவ்வுண்மையை விளக்கவே அர்த்தநாரீசுவரனும் இராதாகிருஷ்ணனும் எழுந்தார்கள்.

உயிரோடு இசைத்து நம் சுவை உணர்ச்சிகளை எழுப்புகிறது இசைத் தமிழ். சைவ வைணவ சமய ஆச்சாரியர்களுடைய பக்தியைப் புலப்படுத்தியது இசைத் தமிழே. சிவனடியார்களையும் வைணவ பக்தர்களையும் ஒன்று சேர்த்தது இசைத் தமிழே. இசையால் தெய்வீகக் கலை வளரும். மனிதன் உயர்வதற்கும் காரணம் இசையே எனலாம்.

இசைத்தமிழை மூன்றாக்கலாம்; அவை இன்னிசை (Melody) ஒத்திசை (Harmony) தொகைப்பண் (Polyphony) என்பன. இசை எழுவதற்கு ஒலி, சுரம். இடைவெளி முக்கியமாம், திராவிட இசைகளில் (கருநாடகம்) தேவாரப் பண்களே மிகத் தொன்மையான உருக்கள் (உருப்படிகள்) ஆகும். மொழியின் பெயரால் இசையைப் பிரிக்கக்கூடாது. இசையும் மருந்தும் மனிதப்பண்பும் உலகத்துக்குப் பொதுவுடைமைகளாகும். மனிதப் பண்புக்குரியன கூறும் நூல் உலக மறையன்றோ?

இசைத்தமிழ் அருங் கருத்துக்களைக் கேட்போர் விரும்பிக் கேட்கும்படி இனிய ஓசையோடு சொற்களைத் தொடுத்துப் புலப்படுத்துவதாகும், சிலப்பதிகார வுரையாசிரியர் ''நிறம் தோன்ற'' என்றார். இத்தொடர் ஆய்வுக்குரியதே. சித்திரக்காரன் கடிதத்தில் பூவைத் தீட்டுவதற்கு முன் வெறும் கோடுகளால் வரைகின்றான். அத்தகைய 'புனையா ஓவியமே' தாளத்தோடு பாடும் பாட்டு; பல வண்ணம் தீட்டிய பூவையும் அலங்காரம் பண்ணிய பாவையும் இயற்றமிழ் இசைத்தமிழாவதற்கு ஒப்பிடலாம், ஓவியன் உருவுக்கு நிறம் தீட்டிப் புனைதற்போல் பாடகன் காவியத்திலுள்ள கவிதைக்கு இன்னிசை சேர்க்கின்றான்.

விடியற்காலையில் பாடும் இசையும் உண்டு. நவசுவைக்கும் நவ ராகங்கள் உண்டு; இவைகளின் விகற்பங்களே இன்றைய கருநாடக விசைகளாகும், தாலாட்டும், மணப்பாட்டும், கையறுநிலையும் இன்ன எழுத்துக்களாலும் இராகங்களாலும் பாடவேண்டும் என முறை இருக்கிறது. ஐந்து நிலங்களுக்கும் பெரும் பொழுதுக்கும் சிறு பொழுதுக்கும் உரிய இசைகளும் இயங்களும் இருந்தன. பல்வேறு யாழ்களும் பறைகளும் காட்டு வாசிகளிடம் உபயோகத்தி

லுள்ளன. பாக்கள் உருக்கள் பாட்டுகள் வரிகள் என்பன பண்களையே குறிக்கும் காலத்திற்கும் நிலத்திற்குமேற்ப பண்களைப் பாடவில்லையெனின் பாம்பும் பறவையும் மாவும் மக்களும் மகவும் இன்பம் பெறுர். எவ்வுயிர்க்கும் (மரம் உட்பட) இசையறிவு உண்டு. ''ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கற; பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கற'' எனல்ஒரு பழமொழி. எனவே, ஆடியும் பாடியும் பசுவின் பாலைக் கறத்தல் உண்டு. நாதசுரம் நாளும் கேட்ட கோயிலுள்ள மரத்தையே வெட்டி மத்தளமும் மிருதங்கமும் வீணையும் யாழும் செய்யும் பழக்கம் இன்றும் அறிஞரிடமுண்டு. பயிர்கள் மிக்க பலனைத்தர இசையைப் பரப்பலாம். பிணிக்கு மருந்தாகும் இசையமுதம். இருதயத் துடிப்பையும் நோயையும் இசையால் தடுக்கலாம். ''தேவாரம் பாடுவதாலும். கேட்பதாலும் மன வமைதியோடு இதய நோயை போக்கிச் சுகம் பெறலாம்'' என்கிறுர் இதய வைத்திய நிபுணரும் மருத்துவ மேதையுமாகிய டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள். மழை பொழிவதற்கும் வெயில் குறைப்பதற்கும் பாம்புவிட மிறங்குவதற்கும் பஞ்சம் போக்குவதற்கும் ஜுரம் போக்கவும் வயிற்றுவலி நீங்கவும் கிரக தோஷங்கள் விலகவும் அவைகளுக்கே உரிய தேவாரப் பண்களைப் பாடுக.

மேகராகக் குறிஞ்சிப் பண்ணைப் பாடியும் திருவெம்பாவை இசைத்தும் திருப்பாவை இசைத்தும் மழையைப் பெறலாம் என்பது பண்டையோர் எண்ணம்; அநுபவமும் ஆகும். ''செயற்கை மழை'' என்றும் ''மழை விதைத்தல்'' என்றும் கண்டனரே அன்றி மேகராகக்குறிஞ்சியின் உண்மையை இன்றும் ஆராயவில்லை, ''கூற்ருயின'' பாடி வயிற்றுவலியையும் ''மந்திரமாவது'' பாடிக் காய்ச்சலையும் ''வாகிதீரவே'' பாடிப் பஞ்சத்தையும் ''வேயுறு''

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS 600 090.

பாடி நவக்கிரக தோஷத்தையும் "ஒன்றுகொலாம்" ஆனால் "சடையாய்" என்பன பாடி நாகப்பாம்பு விஷத்தையும் போக்கிக் கொள்ளலாம். இத்தேவாரப் பண்களை அவைகளுக்கே உரிய இசையால் பாராயணஞ் செய்ய வேண்டும்; அன்றே பலன்கிட்டும்; இஃது எம் துணிபு, இறைவனை ஓசை ஒலியேலாம்ஆனாய் நீயே'என்றார் அப்பர் சுவாமிகள்.

இசையில்லா இடமில்லை. இற்றைய நாளிலும் தென் கடல் தீவுகளில் (South Sea Islands) மக்கள் மீன்களைக் கடற்கரைக்கு விளித்துப் பிடிக்க ஒருவகையான இசைபாடுகிறார்கள். பாம்புகளைப் புற்றிலிருந்து வெளியாக்கிப் பிடிக்கவும் பண்படுத்தவும் பழக்கவும் மோடிராகம் பாடுவது நாம் அறிந்த உண்மையே. காய்ந்துலர்ந்த மரத்துண்டத்திலும் கருங்கல்லிலும் இசையுண்டு. மதுரை, திருநெல்வேலி, குடுமியாமலை, தாராசுரம் முதலிய தலங்களில் கற்றூண்கள் இசை வழங்குகின்றன.

கயிலாயமலையைத் தூக்கிய இராவணன் சாமகீதம் பாடிப்பிழைத்தான்; உடலும் உயிரும் சுகம்பெற இசைமிக முக்கியமென உணர்ந்த இராவணன் தன் கொடியில் வீணையைப் பொறித்துத் தூக்கினான். இலங்கேசுரன் வீணைக் கொடியோனானான். இன்று அமெரிக்க நியாயஸ்தலங்களில் வரும் மனமுறிவால் வரும் பல மணமுறிவு வழக்குகளை ஒருவகை இசையைப் பாடிப் புருஷன் மனைவி மனங்களை மாற்றி "மணமுறிவு வேண்டா" என்று கூறிவிட்டுத் தம் பதிகளாகச் சென்று இல்லறம் நடத்துகின்றனராம், என்னே இசைத்தமிழின் விந்தை.

பண்டையில் இசைக்கலை வல்லுநர்களும் இசை நாற்ருவது புலவர்களும் பாணர்களும் பாடினிகளுமே ஆவார்கள். பாடினி ஆடவும் பாணன்பாட மரபு. அரண்மனைகளி

லும் ஆலயங்களிலும் இசை விருந்தளிப்பவர்கள் பாணர்களே. வீரர்களை இயக்குவதற்கும் மன்னர்களை மகிழ்விப்பதற்கும் தேவர்களிடம் வரம் பெறுதற்கும் பயன்பட்டது இசைத்தமிழே ஆகையால் இசை ஓர் அரிய கலையாகும். இயற்கையோடு செறிந்து வாழ்நர்க்கு, மலையருவியும், மரங்களின் அசைவும் குருவிகளின் குரலும் யானையின் பிளிறலும் மூங்கில் துவாரத்தினுட்புகும் காற்றும் ஆற்றொழுக்கும் பூவண்டின்ரீங்காரமும் இசையாகும். இடைநில மக்களாகிய இடையர்கள் தங்கள் குழலில் பஞ்சாட்சரத்தையும் எட்டெழுத்தையும் வைத்து வாசிப்பதுண்டு; இந்த தேவகானத்தைக் கேட்டதும் மாக்களும் மக்களும் பறப்பனவும் ஊர்வனவும் செயலற்று நிற்குமாம்.

'இல்லினுள் இரண்டு நாள் சுற்றம்' என்முன் சச்சந்த மகாராஜா. இவ்விரண்டு நாட்களையும் மூன்றாக்கிப் பார்க்கில் பிறந்தான், இருந்தான், இறந்தான் என்பனவே கிடைக்கும். இம் மூன்றிற்கும் உரிய உணவும், உடையும், உறக்கமும் இருந்தும் மனவமைதி மனிதன் பெறவில்லை. வயிற்றுணவை விடச் செவிக்குணவைத் தேடினன் மனிதன். அறுசுவையைவிட ஒன்பான் சுவையையே வேண்டினன். அழிசுவையைவிட அழியாச் சுவையாம் இசையமுதினைக் கண்டான்; கேட்டான்; மகிழ்ந்தான்; தன்னை மறந்தான்; தலைவன் தாளையடைந்தான். கடற்கரையிலும் காட்டிலும் மலைமேலும் காதுகளை மூடிய காலத்தும் "ஓம்" எனும் ஓசையையே கேட்டான். அந்த மூல மந்திர வோசையைச் சமட்டியாகவும் வியட்டியாகவும் கொண்டு இசைக்க ஆரம்பித்தான்.

தேவாலய விழாக்களில் நாதசுர மில்லாமல் ஊர்வலமிராது. இசை விருந்து இறைவனுக்கு முகந்தது.

இசை ஆன்மாவை இசைத்து ஆண்டவனோடு சேர்ப்பது. நவசந்தி தானமும் பிரம்மதானமும் ஆகாச மணி யோசையும் கைம்மணி யோசையும் கண்டாமணி ஒலியும் கொத்துமணிகளினோசையும் புஜங்க லளித நிருத்தமும் மத்தளமும் பஞ்சமுக வாத்தியமும் சர்வ வாத்தியமும் இன்றும் கோயில்களிற் காணலாம்; கேட்கலாம். இவை இசையின் பிரிவுகளாம் நிருத்தம், கீதம், வாத்தியம் என்பனவாகும். இசைமூலம் இறைவழிபாடு மிக உயர் நெறியாகும். பாடும் பணியே பெரும் பணியாகும்.

ஆலயத்தில் நாடகம்:—

கோவில் திருவிழாக்களில் இசை நாடகம் (Opera) தோன்றியது. இந்த நாடகத்துக்குப் பாட்டும் இசையும் மிக முக்கியம். ஆடலும் பாடலும் சேர்ந்ததே நாடகமாக விளங்கியது. பின்பு உரை நடையும் கலந்தது. தலைவியும் தலைவனும் ஏனைய பாத்திரங்களும் கேள்விக்குப்பதில் கூறுதலும் சம்பாஷணைப் பாடலாக அமைந்தது. இன்னும், திருக் கூத்திலல்ல, தெருக் கூத்துக்களில் கேள்விப்பாட்டும், பதில் பாட்டும் கேட்கலாம். இதுவே பண்டைய தமிழ் நாடக வடிவு; பேச்சுரை நடை பிற்காலத்தில் புகுந்ததே. அதுவே நாடகத்தை அழகாக்கியது. அரண்மனையில் நடித்த நாடகம் வேத்தியல் என்றும் கோயிலில் நடித்தது பொதுவியல் என்றும் இலக்கணிகள் வகுத்தனர். இவ்விருவகை நாடகங்களை நடித்தது பொதுவியல் என்றும் இலக்கணிகள் வகுத்தனர், இவ்விருவகை நாடகங்களை நடிக்கத் தனித் தனி "நாடகக் குழுவினரும்" (Dramatic Troupe) ஆடற் குழுவினரும் (Dance Party) இருந்தனர். சோழர் காலத்தில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இசைத்தமிழும் நாடகத் தமிழும் வளர்ந்தன. தனி மண்டபத்தில் ராஜ

ராஜேஸ்வர நாடகம் ஆண்டுதோறும் வைகாசி முழு நிலா வன்று நடிக்கப்பட்டது. அணைத்த திருநல்லூரில் (பந்தணை நல்லூர்) விக்கிரமாதித்த ஆச்சாரி என்றவர் ஒரு பெரிய நாடகப் புலவர். திருப்பாதிரிப்புலியூரில் உள்ள ஆலயத்தில் ''அப்பர் சரிதம்'' எனும் பூம்புலியூர் நாடகம் நடிக்கப்பட்டது. கிருஷ்ணதேவராயராலும் மதுரை நாய்க்கர்களாலும் முத்தமிழும் கோயிலில்வளர்ந்தனகோயில்களேபழைய இயற்றமிழ்நூல்களையும் இசைப்புலவர்களையும்நடிகன்நடிகைகளையும்தாசன் தாசிகளையும் பாதுகாத்தவை. நுண்கலைகளில் வல்லுநர்களாக இருந்த தமிழர்கள் நாடகத்திலும் நடனத்திலும் மிக்க கைதேர்ந்தவர்களாக வீற்றிருந்தனர். கல்வி கேள்விகள் போல் இசையும் நாடகமும்விளங்கின. ஆலயங்கள்முதியோர் கல்வி நிலையங்களாம்; அவைகள் இன்றுள்ளன போல் அன்று வெறும் கற்றளிகள் அல்ல; கலைகளின் கரு ஆலமாகக் காட்சியளித்தன. புத்தகாலயங்களும் இசையரங்கங்களும் நாடகசாலைகளும் பிரசங்கமேடைகளும் யாகசாலைகளும் வேதபாடசாலைகளும் கோயிலில் குடிகொண்டன. எனவே, அக்கோயில் தேவாலயங்களாகத் திகழ்ந்தன. தெய்வீகம் பொலிவுற்றது. தெய்வக்கலை விளங்காக் கற்றளிகள் வெறும் கற்குவியலேயாகும். அங்கு வழிபாட்டிற்குச் செல்பவரும் கண்ணுள்ள குருடர்களே.

நாட்டிய நாடகம் என்பது ஒருவகை. அதனில் சாகித்யமும், இசையும் நடிப்பும் நாட்டியமும் இருக்கும். நாடகத் தமிழ் என்றும் கடவுள் வழிபாட்டுடனே ஆரம்பமாகும்; கதை தழுவி நிகழும். குறவஞ்சி ஒரு நாட்டிய நாடகமே. நாடகத் தமிழ் கலைகள் பலவற்றிற்கும் மூலமாகும்; உள்ளத்திலுண்டாகும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் அகப்பொருளையும் உடற் கூறுகளின் மூலம் வெளிப்படுத்தும், நடராஜாவே நாடகத்துக்கும் நாட்டியத்துக்கும் தலைவர்

எனக் கொண்டனர். தமிழர் மக்களின் நாட்டியத்தையும் இறைவனது பஞ்ச கிருத்திய பிரபஞ்ச நாடகத்தையும் ஒன்று படுத்தினர் தமிழர். எனவே, உலகெங்கும் நாடகத் தமிழின் பெருமை பரவியது. தமிழ் நாடகங்கள் தெய்வீகத் தன்மையோடு பண்டு விளங்கின. கீழ் ஆசியத் தீவுகளில் தமிழ்நாடகங்களை மொழிபெயர்த்து நடித்தனர் மக்கள்.

தென்னிந்தியக் கோயில்களில் பண்டு தமிழ் நாடகங்களையும் நாட்டியங்களையும் நடித்தும் ஆடியும் வந்தனர் மக்கள் என்பதைக் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். அவைகளின் வாயிலாக அன்றைய அரசியல், சமூகம், ஓவியம், இசை, இலக்கியம் இலக்கணம் அறியலாம். ஒவ்வொரு கோயிலிலும் ஆண்டுக்கொரு முறையாகிலும் கூத்து நடந்தது உண்மை. அக் கூத்தினை ஆடுபவர்களைப் பதியிலார் தளிச்(கோவில்) சேரியார், தேவதாசியர்கள், இடபத்தளியிலார், அரங்காடுவர் என்றனர் மக்கள். தாசிகளும் தாசர்களும் செய்த தொண்டுகளில் நாட்டியமாடுதலும் ஒன்று. தஞ்சை காஞ்சி ஆடு துறை திருவெற்றியூர், திருவிடைமருதூர், திருவெங்கைவாயில்களில் நாடகமேடைகளும் சதிர்ச்சாலைகளும் நாடகசாலைகளும் நாடக மகளிர்வாழும் கன்னிமாடங்களும் இருந்தன. திருவெற்றியூரில் இன்றும் ‘ராஜராஜன் மண்டபம்’ என்னும் நாடகசாலை உண்டு. திருவாதிரை, தைப்பூசம், விஜயதசமி, சித்திரை முதல் நாள் வைகாசிப் பௌர்ணமி முதலிய விழா நாட்களில் தமிழ் நாட்களில் தமிழ் நாடகங்கள் கோயிலில் நடிக்கப்பட்டன. இந்நாடகங்கள் ஆடும் நடிகர்கள் ஊர் ஊராகச்சென்று பக்தி மார்க்கத்தைப் பரப்பினர் என்றும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

உயிர்கள் மலம் நீங்கிப் பரிசுத்த மடைந்து பேரின்பம் பெறுவதற்காகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்

தல், அருளல் எனும் பஞ்சகிருத்திய நாடகம்புரியும் கூத்தப் பெருமானை வணங்கும் சைவர்கள் கோயிலில் நாட்டியத்தை யும் நாடகத்தையும் வளர்க்க வேண்டும். "ஆண்டவன் குணக்கடல் ஆடுதி நன்றரோ" என்றான் கம்பன்.

காந்தியடிகளைத் திருத்தியவை அரிச்சந்திர நாடகமும் சிரமணன் கூத்தும் ஆகும்; இவை அன்று தெருக்கூத் துக்களே யாகும். சத்தியம் பெறவும் பிதுர் பக்தி பெறவும் உதவியன் மேற்கண்ட நாடகங்கள் என்று காந்தியடிகளே தம் வரலாற்றில் கூறியுள்ளளார். பாமர மக்களைத் திருத் தவே பல நாடகங்கள் உலகெங்கும் தோன்றின. காட்சி யும் கேள்வியும் மக்களறிவில் மறையா. குழந்தைக் கல்வி யிலும் இவை மிக முக்கியம் எனத் தற்கால மேதைகள் கூறுப. சங்க காலத்தில் இருந்த பல்வேறு நாடகங்களும் நடனங்களும் கூத்துக்களும் இன்று கிடைக்கவில்லை. ஐம் பெரும் காவியங்களும் நாடக நூல்களே. இன்றும் கண் ணகி, மணிமேகலை, ஜீவக சிந்தாமணி நாடகங்கள் நடிக்கப் பார்க்கிறோம்.

"கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே
பெருஞ் செல்வம்
போக்கும் அது விளிந்து அற்று."

இத்திருக்குறள் திருவள்ளுவர் காலத்துக்கு முன்னரே நாடகம் இருந்ததை வலியுறுத்துகிறது. பூரியாரிடம் திடீர் என்று குவியும் செல்வத்துக்கும் அழிவினுக்கும் நாடகம் காண வருவோரையும் கண்டு கலைவோரையும் உவமை கூறிய நயம் பாராட்டத் தக்கது. சமயத் தொடர்புடைய நாடகம் பக்தியையும் அடியார் நாயனார் பாகவதர் சரித நாடகங்கள் ஒழுக்கத்தையும் மக்களிடையே பரப்பின. உயர்ந்த கருத்தோடு கண்ட நாடகத் தமிழ் இன்று அறியா

மையால் மேடைகளிலும் படக்காட்சி சாலைகளிலும் தாழ்ந்த கருத்துகளுக்கும் வீழ்ந்த ஒழுக்கத்துக்கும் உபயோகமாகிறது. பேரின்பம் பெற உதவிய நாடகம் இன்று மனிதர்களையும் சிறுவர்களையும் சிற்றின்ப வெறியர்களாக்குகிறது. என்னே அறியாமையின் வலிமை! உலக வியல்பையும் நிலையாமையையும் பத்தியில் மேன்மையையும் அன்பையும் தொண்டையும் பற்றி நாடகம் போதிக்கவேண்டும். கோயில் விழாக் காலங்களில் நாடகமும் நடனமும் சொல் விருந்தும் இசை விருந்தும் நிகழ வேண்டும்.

நடராஜபெருமானே நாடகத்துக்கு ஆதி ஆசிரியன் என்று பழைய நூல்கள் கூறுகின்றன. நடராஜபெருமான் பவனிவருங்கால் யாழும், குழலும் கோடும், வங்கியமும் பறையும், சல்லியும், பதலையும், ஆகுளியும், பாண்டிலும் தூம்பும் வாசிக்கப்படுமாம். நாடகங்களுக்கும் கூத்துக்கும் துணைக்கருவிகளும் இவைகளே, வேடந்தரித்து நடிப்பவரையே பொருநர் என்பது. நடிகைகளை விறலியர், கூத்தியர், கோடியர் என அழைத்தனர் மக்கள். ஆடற்புலவர்கள் அரசர்களிடமும் வள்ளல்களிடமும் பழமரம் தேடும் பறவையைப்போல் சென்று பரிசில்பெற்றுவந்தார்கள். இன்றும் வட இந்தியாவில் இவ்வழக்கத்தைக் காணலாம். நாடகம், கூத்து என்பன இரண்டு: அவ்விரண்டையும் அகநாடகம், புறநாடகம், அகக்கூத்து, புறக்கூத்து என நான்காகப் பகுத்தனர் பண்டையோர். திரிபுரதகனம், மன்மததகனம், (காமதகனம்) மார்க்கண்டேயர், இலங்கா தகனம், வள்ளிக்கூத்து, வள்ளித்திருமணம். அமிர்தமதனம் பாண்டரங்கம், கொடுகொட்டி, காபாலம் எனும் நாடகங்களும் நடனங்களும் கோயில்களில் ஆடியவை.

எனவே, முத்தமிழும் மறுமலர்ச்சியடைய நம் தேவாலயங்களில் சொல்விருந்தும் புராண பிரசங்கமும் சத்காலட்

க்ஷேபமும் இசைவிருந்தும் பாட்டுக்கச்சேரிகளும் பாகவத மேளமும் பஜனையும் வேதமோதலும் தமிழ்மறை பாராயணமும் நடனமும் நாட்டியமும் சதிர்களும் நாடகங்களும் கூத்தப்பெருமானை நடுநாயகமாகவைத்து நடக்க ஏற்பாடு செய்க! தேவதாசியாடலையும் கொணர்க! அகமார்க்கம் வளர முத்தமிழும் வளரவேண்டும். சொல்முறி, யாழ்முறி, இசைமுறி, அன்னக்குரல் ராகம் (Swan Song) நோய் போக்கும் இசை. பயிர்வளர்க்கும் இசை, மழைபொழிவிக்கும் இசை, வெயில் மறைக்கும் இசை முதலியன ஆய்வதற்குரிய இசையாராச்சிக்கூடமும் தனித்தமிழ் வளர்க்கும் பல்கலைக் கழகமும் தேவாலயங்களைச்சார்ந்து வளரும் கலைக் கூடங்களும் கோயில் குருக்களையே ஆசிரியராகக்கொண்ட ஆரம்பப் பள்ளிகளும் தமிழகம் காணவேண்டும். கோயில்களைக் கண்காணிக்க முற்றும் துறந்த முனிவர்களையே அமர்த்தவேண்டும். மற்ற மதங்களில் தலையிடாத அரசு இந்துமத தர்மபரிபாலனத்திலும் தலையிடக்கூடாது. ஆனால் அநீதியை நிறுத்துவதே அரசின் முதற்கடனாகும்.

—❋—

வேண்டுகோள்

டாக்டர் உ. வே. சா. அவர்கள் பல ஆண்டுகளுக்கொரு முறை உலகில் தோன்றி உதவும் ஒரு பெருமனிதர். அவரது சுவடிகள் அவரது திருமகனார் கலியாணசுந்தரையர் அவர்களால் திருமதி ருக்மிணிதேவியாரிடம் அளிக்கப்பட்டன. அவற்றைக்கொண்ட நூல்நிலயம் ஒன்று (கடந்த 20ஆண்டுகளாக) தொண்டாற்றி வருகிறது.

இவ் உ. வே. சா. நூல்நிலயத்திற்கென ஒரு தனிக் கட்டிடம் தேவைப்படுகிறது. கட்டிடச் செலவுத் தொகை ரூ. 35,000, ஆகும். ஒவ்வொருவரும் ஒரு சிறிதளவேனும் இந்த ஆலயத் திருப்பணிக்கு நன்கொடை கொடுப்பது தம் கடமையாகக் கொள்ளவேண்டும். எனவே, அனைவருடைய மனமார்ந்த உதவியால் இப் பெருங்கோயில் விரைவில்கட்டி முடிய வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்கிறோம்.

தமிழ்நாடு!

புலவர், மு. உலகநாதன்

செந்தமிழ் பேசிடும் நாடெங்கள் நாடே!
தேன்தமிழ் வள்ளுவன் பிறந்ததோர் வீடே!
எந்தவோர் மொழியிலும் இல்லாத இனிமை
இன்தமிழ் ஒன்றுக்கே உலகினில் உண்டே!
சொந்தமாய் இலங்கிடும் தனித்தமிழ் போல
சொல்லிடப் பிறமொழி உலகெங்கும் ஏது?
இந்தியா பலமொழி கொண்டதோர் நாடே!
இருப்பினும் தமிழுக்கே இலையில்லை ஈடே!

கொல்புலி வீரர்கள் கொண்டபொன் னாடு!
கொடையிலே குமணர்கள் வாழ்ந்திடும் நாடு!
சொல்லினில் உயர்வினைச் சொல்லிடும் நாடு!
சோம்பிடும் வழக்கமே இல்லாத நாடு!
வில்புலி கயல்வேந்தர் தமிழ்கண்ட நாடு!
விளையாட்டாய் எதிரியை வென்றவர் நாடு!
இல்லையே ஒப்புமை எனும்தமிழ் நாடே!
இதைப்பாடி வணங்குவோம்! பாடிடு! பாட்டே!

தாய்திரு நாட்டிடை ஒற்றுமை கொள்வோம்!
சண்டைகள் இல்லாத நல்வாழ்வு வாழ்வோம்!
காய்த்திடும் கனிகளும் கதலியும் உண்டே!
கன்னலும் செந்நெல்லும் அடைத்தேனும் உண்டே!
ஏய்த்திடும் புவிவாழ்வை நாம்நீக்கிக் கொண்டு
இந்நாட்டைப் பொன்னாடாய் ஆக்குவோம் முந்து!
வாய்த்தநல் இயற்கையால் வளங்கொண்ட நாடு!
வாழ்த்துவோம் இதற்கீடே இலையில்லை! ஈடே!

மதிப்புரை

ஜீவசம்போதனே

ஆசிரியர்: பிரம்மாசாரி கே. சூரியகோடி

கிடைக்குமிடம்: ஸ்ரீ ஜைனசித்தாந்த நூல் நிலையம்.
7. சுப்பிரமணியமுதலி தெரு,
சென்னே-1.

பக்கங்கள்: **344**

விலே: ரூ. **4**

'ஜீவசம்போதனே' என்னும் இந்நூல் உலக உயிர்களுக்கு உறுதிபயப்பதாகிய பன்னிரண்டு சிந்தனேகளேப்பற்றி சிறப்பான வெண்பாக்களினுல் ஆக்கப்பட்ட ஜைனசமயத்தின் சிறந்த கொள்கைகளே தெள்ளத் தெளிவாக விளக்குகின்ற ஒரு நூலாகும். இம்மைப் பிறப்பில் உழலும்மக்கள் மறுமையிலும் நல்வழிப்பட வேண்டும் என்னும்நற்கருத்தால் அநித்தியம், அசரணம்முதலியபன்னிருபகுப்புக்களால்ஆக்கப்பட்டதாகும். இப்பனிரண்டற்கும் முறையே நிலேயாமை, புகலிடமின்மை, தனித்தன்மை, உறவற்ற தன்மை, மாற்று, உலகம், அழுக்குடைத்தன்மை, ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு அறம், அறிவு பெறற்கருமை என்னும் கருத்துக் கூறப்பட்டுள்ளது. பிறவிப் பெருங்கடலாகிய கடலே நீந்துதற்கு இந்நூல் ஒரு நாவாயாக இலங்கி மக்களே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வழியில் நெறிப்படுத்தும் என்பதில் ஐயமில்லே.

புலவர் மு. உலகநாதன்

இரங்கற் கூட்டம்

15—3—63 வெள்ளியன்று தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்ச் சங்கச் செயற் குழுக் கூட்டத்தில் முன்னால் குடியரசுத் தலைவரும் தமிழ்ச்சங்கத்தின்காவலருமான திரு. டாக்டர். இராசேந்திர பிரசாத் அவர்களின் எதிர்பாராத மறைவு குறித்து தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டு தீர்மானம் அனுப்பிவைக்கப்பட்டது.

15—3—63 வெள்ளியன்று தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்ச் சங்கச் செயற்குழுக்கூட்டத்தில் சிவகங்கை அரசரும் சங்கத்தின் ஆதரவாளருமான திரு. து. சண்முகராசா அவர்களின் மறைவுகருதி தனது ஆழ்ந்தஅனுதாபத்தையும் அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது.

—*—

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	ப
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனாநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாகயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினா விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
44.	திருக்குற்றாலமாலை	—	0	2
45.	தண்டலையார் சதகம்	—	0	4
46.	இராமோதந்தம்	—	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
49.	கூடற்புராணம்	—	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
53.	பாப்பாவினம்	—	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6
58.	கலைசைக்கோவை	—	0	12
59.	பெருந்தொகை	—	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
61.	சிராமலைக்கோவை	—	0	12
62.	மத்யவியாயோகம்	—	0	2
63.	அமிர்தரஞ்ஜனி	—	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
65.	திருச்சிறுடவியுருலா	—	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகானந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.